[ஆ] உறுப்பினர் கொடுத்துள்ள அறிக்கை.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்திலே ஏற்கனவே எம். பி. பி. எஸ்., மருத்துவத் துறையில் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி நோட்டீஸ் கொடுக்க வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன் : ஏற்கனவே கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுத்திருந்தாலும் கொஞ்சம் பொறுத்துப் பார்க்க வேண்டும். உடனடியாக எடுத்துக்கொள்ள முடியாது.

திரு. ரா. கிருஷ்ணன் : நாளைக்கு எடுத்துக்கொள்ளப் படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப்பட்ட ஒரு வாக்குறுதியைக் கொடுக்க முடியாது. எல்லா உறுப்பினர்களுக்கும் அவர்களுடைய தொகுதியைப் பற்றி முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற வாக்குறுதியை கொடுக்க முடியாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[இ] உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவது குறித்து.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினை குறித்து உங்கள் மூலமாக அரசிடமிருந்து விடை பெறலாம் என்று விரும்புகிறேன். உட்கார வைத்து விட்டீர்கள். மாநகராட்சி தேர்தல் சம்பந்தமாக இட ஒதுக்கீடு தவறானது என்று நீதி மன்றத்திலே வழக்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சம்பந்தமாக பதில் சொல்வதற்கு அமைச்சர் இங்கே இல்லை. நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்.